செ.வெ.எண் : 35/ஏப்ரல் நாள் : 29.04.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-க்கான இறுதி வாக்காளர் பட்டியலின்படி மாவட்டத்தில் மொத்தம் 11,01,418 வாக்காளர்கள் உள்ளனர்.

## இறுதி வாக்காளர் பட்டியலினை வெளியிட்டு

### மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (29.04.2016) இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தேர்தல் பொது பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள், (பரமக்குடி, திருவாடானை) திரு.இரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-க்கான இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., தேர்தல் செலவினப்பார்வையாளர் திரு.ப்ரதாப்நாராயண் சர்மா அவர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) ஆகியோர் உடனிருந்தனர்.

அதன்பின்பு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தேர்தல் வாக்குப்பதிவு நாள் நெறுங்குவதைத் தொடர்ந்து தேர்தல் முன்னேற்பாடு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-க்கான இறுதி வாக்காளர் பட்டியல் இன்று (29.04.2016) வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்டத்தில் 5,50,615 ஆண் வாக்காளர்களும், 5,49,506 பெண் வாக்காளர்களும், 73 இதர வாக்காளர்களும், 1,224 பணித்தொகுதி வாக்காளர்களும் ஆக மொத்தம் 11,01,418 வாக்காளர்கள் உள்ளனர். அவற்றில் 18 முதல் 19 வயது வரை உள்ள வாக்காளர்கள் 8,109 நபர்களாகவும், 90 முதல் 100 வயது வரை உள்ள வாக்காளர்கள் 1,545 வாக்காளர்களாகவும், 100 முதல் 105 வயது வரை உள்ள வாக்காளர்கள் 150 நபர்களாகவும், 105 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்கள் 46 நபர்களும் உள்ளனர். 21.01.2016 முதல் 15.04.2016 வரை மொத்தம் 17,006 வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் இறப்பு, இடமாற்றம், இரட்டைப்பதிவு உள்ளிட்ட காரணங்களுக்காக 13,995 நபர்களின் பெயர்கள் வாக்காளர் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் வாக்குப்பதிவிற்காக மொத்தம் 747 அமைவிடங்களில் 1,307 வாக்குச்சாவடி மையங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 73 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களாக கண்டறியப்பட்டு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வாக்குப்பதிவிற்காக 1568 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேவை என கணக்கிடப்பட்டு 2410 வாக்குச் செலுத்தும் இயந்திரங்களும் (Ballot Unit), 2228 கட்டுப்பாட்டு கருவிகளும் (Control Unit) பாதுகாப்பான முறையில் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் பணிகளுக்காக 119 மண்டல அலுவலர்களும், 1,307 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 6,347 வாக்குச்சாவடி அலுவலர்களும், தேர்தல் வாக்குப்பதிவு பணிகளுக்காக 10,763 அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். தபால் வாக்குப்பதிவிற்காக 11,951 வாக்காளர்கள் கணக்கிடப்பட்டு தபால் வாக்குச் சீட்டுகள் தயார் நிலையில் உள்ளன. மேலும் மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்களித்திட ஏதுவாக 258 சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதுதவிர, தேர்தல் பணிகளுக்காக 162 அரசு வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் விதிமுறை மீறல்கள் மற்றும் முறைகேடுகளை கண்காணித்திட 12 பறக்கும் படை குழுவினர்களும், 12 நிலை கண்காணிப்புக் குழுவினர்களும், 4 வீடியோ கண்காணிப்பு குழுவினர்களும், 4 வீடியோ பார்வையிடும் குழுவினர்களும், 4 உதவி செலவினப் பார்வையாளர்களும், 4 கணக்கு குழுவினர்களும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பறக்கும் படை கண்காணிப்பு குழுவினர்கள் மூலம் முறையான ஆவணங்களினின்றி கொண்டு செல்லப்பட்ட மொத்தம் ரூபாய் 1,82,72,750/- பறிமுதல் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்களின் மூலம் முறையான ஆவணங்கள் சமர்பிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளது. அதேபோல நிலை கண்காணிப்புக் குழுவினர் மூலம் முறையான ஆவணங்களினின்றி கொண்டு செல்லப்பட்ட மொத்தம் ரூபாய் 5,61,370/- பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர ரூபாய் 10 இலட்சம் மதிப்பிலான 100 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு அது தொடர்பாக புதுக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது.

தேர்தல் நேரத்தில் பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட ஏதுவாக கலவரம் விளைவிக்க கூடியவர்கள் என 108 நபர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அவற்றில் 80 நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிணையில் வெளிவர இயலாத பிடியாணைகள் மூலம் 258 நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 25 நபர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 396 நபர்கள் மீது குற்றவியல் நடைமுறைச் சட்டடத்தின் (CRPC Act) கீழ் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உரிமம் பெற்ற துப்பாக்கி உரிமையாளர்கள் 102 நபர்களிடமிருந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காவல்துறை வசம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுதவிர தேர்தல் நன்னடத்தை விதிமுறை மீறல்கள் தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளின் மீது இதுவரை மொத்தம் 26 முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் 22.04.2016 முதல் வேட்பாளர்களின் வேட்புமனு தாக்கல் செய்யத் தொடங்கி 28.04.2016 வரை பரமக்குடி தொகுதியில் 15 வேட்பாளர்களும், திருவாடானை தொகுதியில் 24 வேட்பாளர்களும், இராமநாதபுரம் தொகுதியல் 17 வேட்பாளர்களும், முதுகுளத்தூர் தொகுதியில் 16 வேட்பாளர்களும் ஆக மொத்தம் 72 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். அவற்றில் 9 வேட்பாளர்கள் சுயேட்சை வேட்பாளர்கள் ஆவர். மேலும் வேட்புமனு தாக்கல் செய்ய 29.04.2016 இறுதி நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் பணிகளைக் கண்காணித்திடும் வகையில் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள், (பரமக்குடி, திருவாடானை) திரு.இரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) ஆகியோர் பொது தேர்தல் பார்வையாளர்களாகவும், திரு.அட்டுல் கட்டியார்,இ.கா.ப., அவர்கள் காவல்துறை பார்வையாளராகவும் தேர்தல் ஆணையத்தின் மூலம் நியமிக்கப்பட்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளார்கள். எனவே சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-னை எவ்வித பாரபட்சமுமின்றி அமைதியான முறையில் நடத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலிஅக்பர்,சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன் (இராமநாதபுரம்), மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன் (திருவாடானை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.சாந்தா, உட்பட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் , அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**